IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 100/2020

D.W.1 - Surya Kumar

DATE - 07.11.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.11.2025.

பி.வா.சா.1 குறுக்கு விசாரணை–

எனது முதல் விசாரணை பக்கம் 2 பத்தி 3 ல் நான் மீண்டும் எனது தேவைக்காக வாதியிடமிருந்து கடந்த ஜனவரி 2014 ம் வருடம் ரூ.50,000/– கடனாகப் பெற்று வட்டி 24 சதவீதம் ஒப்புக்கொண்டு அதற்கு காட்பாடி எஸ்.பி–ஐ வங்கி கிளையின் பூர்த்தி செய்யப்படாத 3 வெற்று காசோலைகளை மற்–றும் 3 புரோநோட் மற்றும் 3 வெற்று பச்சை நிற தாளில், மற்றும் 3 வெள்ளை நிற தாள்கிளல் செக்கியூரிட்டியாக வாதி எழுதி வாங்கி கொண்டதற்கு இதுநாள் வரை எந்த நீதிமன்றத்திலும் காவல் நிலையத்திலும் வாதியிடம் கேட்டும் திருப்பி தராததற்கு புகார் ஏதவும் தரவில்லை என்றால் சரி. மேற்படி கடனை வட்டியுடன் திருப்பி செலுத்தியதற்கு எந்தவிதமான ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வாதியிடம் மேற்படி காசோலைகள் புரோநோட் வெள்ளை நிற தாள் பச்சை நிற தாள்களை மீண்டும் 14.01.2014 ஆண்டு கேட்டதற்கு வாதி திருப்பி தராமல் இருந்ததற்கு எந்தவிதமான ஆவணச் சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிப்ரவரி 2015 வருடம் வாதியிடம் மீண்டும் ரூ.50,000/– கடனாக பெற்றேன் என்றால் சரி. வாதியிடம் ஜனவரி 2019 வருடம் ரூ.50,000/– கடனாக வாங்கியுள்ளேன் என்றால் சரி. வாதியிடம்

2014 வருடம் முதல் 2019 வரை பல முறை கடன் வாங்கியுள்ளேன்

என்றால் சரி. நான் சொல்வது போல் ஒவ்வொரு முறையும் கடன்

வாங்கும்போது செக்கியுரிட்டியாக வெற்று காசோலைகள் பச்சை நிற

தாள்கள் கொடுத்து கடனை திருப்பி செலுத்திய பின்பும் வாதி திருப்பி

தராமல் தேடி தருவதாக சொன்னதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். (வாதி தரப்பின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 07.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.07 18:43:10 +0530

Additional District Judge(FTC),

Vellore.